செ.வெ.எண் : 466/2023 நாள்: 16.08.2023

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் வட்டார வள பயிற்றுநர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. செ.கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் வட்டார வள பயிற்றுநர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் 20 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ஒரு வட்டார வள பயிற்றுநர் (Block Resource Person) பணிக்கு கீழ்கண்ட தகுதியுடைய நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வட்டார வள பயிற்றுநர்களாக தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கான வயதுவரம்பு 31.07.2023 அன்று 25 லிருந்து 45 வயதிற்குள் இருத்தல் வேண்டும். கல்வித்தகுதியாக வழக்கமான பிரிவில் குறைந்தபட்சம் ஏதேனும் பட்டப்படிப்பு படித்திருத்தல் வேண்டும். மேலும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் / கூட்டமைப்புகள் (SHG / Federations) உடன் பணிபுரிந்த 3 முதல் 5 வருட அனுபவம், பயிற்சியாளர், சமூகப் பணியாளர், வாழ்வாதாரத் திட்ட அனுபவம், முன்னாள் வட்டார வள பயிற்றுநர்கள் மற்றும் பிற அரசாங்கங்கள் துறை பயிற்சியாளராக இருத்தல் வேண்டும். (முன்னாள் வட்டார வள பயிற்றுநர்களாக இருக்கும் பட்சத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்). மைக்ரோ சாப்ட் ஆபிஸ், ஆண்ட்ராய்டு மொபைல் அப்ளிகேஷன் பற்றி நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலம் படிக்க, எழுத மற்றும் பேச தெரிந்திருத்தல் வேண்டும்.

தேர்தெடுக்கப்படும் வட்டார வள பயிற்றுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் (Contract basis) நியமனம் செய்யப்படுவர். இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், அறை எண் : 207, மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் - 636 001 என்ற முகவரியில் அலுவலக வேலை நாட்களில் விண்ணப்பங்களை நேரில் பெற்றுக்கொண்டு 23.08.2023 ஆம் தேதிக்குள் அனுப்ப தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.கார்மேகம்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.

IPROSalem PRO Salem pro.slm PRO Salem